மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

அ.வ.எண். 06/2019

பி.வா.சா.2

பெயர் : அப்துல்காதர் தேதி : 19.08.2024

வயது : த/பெ :

கிராமம் : தொழில் :

மாவட்டம்:

1872 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின் படி 2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

குறுக்குவிசாரணை

நான் பிரமாணவாக்குமூலத்தில் 27.05.1993 கிரைய ஆவணத்தை பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் 1974 ல் பிறந்தேன். 1993 ல் என்னுடைய வயது 19 இருக்கும். பிரமாணவாக்குமூலத்தில் 27.05.1993 கிரைய ஆவணத்தை வாதி ஆள்மாறாட்டம் செய்து முடித்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வாறு தெரியும் என்றால் அவ்வாறு பத்திரம் பதிவு செய்யவே இல்லை. 27.05.1993 ல் நான் கிரையம் பத்திரம் பதிவு செய்யும் போது சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நான் சென்றேனா என்றால் இல்லை. கேரளா மாநிலம் பாரசாலை பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை. முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி ஆவணத்திற்கு குறைவு கட்டணம் வாதி செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. 27.05.1993 தேதிய கிரைய ஆவணம் பற்றி எனக்கு 2015 ல் தான் தெரியவந்தாக சொல்கிறேன் என்றால் சரிதான். ஜமாத்தில் மேற்படி ஆவணத்தை பற்றி யார் சொன்னார்கள் என்றால் பிரதிவாதிகள் சொன்னார்கள். என் பிரமாணவாக்குமூலத்தில் 26.1.1930 தேதிய ஆவணம் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் என்ன ஆவணம் என்றால் பாகப்பிரிவினை ஆவணம். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் என்ன சர்வே எண் என்றும்

தெரியாது. சாகுல் ஹமீது லெப்பை, முகம்மது அப்துல் காதர் லெப்பை பற்றி தெரியாது. முகம்மது அப்துல் காதர் லெப்பை வாரிசுகள் பற்றி தெரியும். அவருக்கு ஐந்து குழந்தைகள். பிராது தபசில் சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் கூட்டுரிமையாளர்கள் என சொல்லியுள்ளதற்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் 1930ம்வருட ஆவணத்தில் உள்ளது. வேறு ஆவணங்களை நான் பார்த்ததில்லை. பிராது தபசில் சொத்து வீடு எனக்கு தெரியும். அந்த வீட்டை கட்டியது முகம்மது அப்துல் காதர் லெப்பை ஆவார். எனக்கு முன்னாடி இந்த வழக்கில் 2ம்பிரதிவாதி சாட்சியம் அளித்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். அவர் தன்னுடைய சாட்சியத்தில் இந்த வீட்டை கட்டியது அவருடைய தகப்பனார் என சாட்சியம் அளித்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. **என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு பிராது தபசில் சொத்தில் உள்ள வீடு என்றால் சரிதான். அந்த புகைப்படம் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.15ன் சிடி மற்றும் பில் தாக்கல் செய்யப்படவில்லை என்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.** வா.சா.ஆ.15 வீடு 1972ல் காட்டப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். எனக்கு செய்துங்கநல்லூர் தான். பிராது தபசில் வீட்டிற்கு பட்டா, வீட்டு வரி, தண்ணீர் இணைப்பு, மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. நான் என் பிரமாணவாக்குமூலத்தில் காதர் முகைதீன் அவர்களின் உடன்பிறந்த சகோதர , சகோதரிகளும் வாரிசுகளும் பிராது தபசில் சொத்தை வாரிசு நிலையில் பாத்தியப்பட்டு கூட்டாக அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் தகப்பனார் காதர் முகைதீன் என்பவரோ பிரதிவாதிகளோ பிராது தபசில் சொத்தில் வாடகைதாரர் முறையில் குடியிருந்து அனுபவம் செய்தது கிடையாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளுக்கும் பிரதிவாதியின் தகப்பனார் காதர் முகைதீன் அவர்களுக்கும் வாதியிடம் எந்த காலத்திலும் வாடகை ஒப்பந்தம் செய்தது கிடையாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. பிராது தபசில் சொத்தில் உள்ள வீட்டில் முகமது அப்துல் காதர் லெப்பையின் காலத்திற்கு பின்னர் அவரது வாரிசுகளும் அவர்களின் காலத்திற்கு பின்னர் மேற்படியார்களின் வாரிசுகள் பிரதிவாதிகள் உள்பட தபசில் சொத்தில் மூன்று தலைமுறையாக 90 ஆண்டுகளுக்கு மேலாக எந்தவித வில்லங்கமுமின்றி கூட்டுரிமையாளர்கள் முறையில் தொடர்ந்து அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சுந்தர் நகர் என்ற பிளாட் அமைத்துள்ள ராமலிங்கம் என்பவரை தெரியும். அவரிடம் பிளான் அப்ரூவல் வாங்கி தருவதாக ரூபாய் 40,000/- வாங்கி ஏமாற்றினேன் என்றால் சரியல்ல. எனக்கு வேலை பணம் வாங்கி கொண்டு பொய் சாட்சியம் அளிப்பது என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒப்பம்/-
சா. முத்துலெட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவைகுண்டம்.